REGD. No. M. 6311

PHONE No. 55630

தனி இதழ்
ஒரு அணா
இலங்கையில் 10 சதம்

மலர் 1] [இதழ் 240

நம் நாடு

தி.மு.க. தின இதழ் ஆசிரியர்.. அண்ணாதுரை

"THE NAM NADU" A TAMIL DAILY THE OFFICIAL ORGAN OF: THE D.P.F

சந்தா விபரம்
உள்நாடு (இலங்கை உட்பட)
ஆண்டு ரூ. 24—0—0
6 மாதம் ரூ. 12—0—0
3 மாதம் ரூ. 6—0—0
வெளிநாடு:
ஆண்டு ரூ. 30—0—0
6 மாதம் ரூ. 15—0—0
3 மாதம் ரூ. 7—8—0

சென்னை: பங்குனி 9உ திங்கள் (22—3—54) ★ ★ ★ வெளியூர்: பங்குனி 10உ செவ்வாய் (23—3—54)

'வசைச் சொற்கள்-இந்தியில் ஏராளம்!'

அம்பாசமுத்திரத்தில் ஆச்சாரியார் திட்டத்தின் வெறியாட்டம்

—(:)—

90 ஆசிரியர்கள் பலி வாங்கப்படுவர்

விக்கிரமசிங்கபுரம், மார்ச் 22—

பல பள்ளிக்கூட நிர்வாகிகள் தங்கள் பாடசாலையிலுள்ள எல்லா வாத்தியார்களுக்கும் நோட்டீஸ் கொடுத்துவிட்டு, 1-6-54-ல் மாணவர்கள் ஆஜருக்குத் தகுந்தபடி வேண்டியவர்களை மட்டும் திரும்ப எடுத்துக்கொள்ள முடிவு செய்திருக்கிறார்கள். இந்த முறையினால் வேண்டாத வாத்தியார்களைப் பழி வாங்க நிர்வாகிகளுக்கு சந்தர்ப்பம் ஏற்படுகிறது.

ஒவ்வொரு வாத்தியாரும் ஜூன் மாதம் முதல் தேதியன்று 20 புதிய மாணவர்களைச் சேர்த்தால்தான் அவர்களுக்கு வேலை கிடைக்கும்.

ஆச்சாரியார் கொண்டுவந்துள்ள புதிய ஆரம்பக் கல்வித் திட்டத்தினால், அம்பாசமுத்திரம் தாலுக்காவிலுள்ள அம்பாசமுத்திரம், கடயம், அம்பாகுடி, அரியநாயகிபுரம், கல்லிடைக்குறிச்சி, சேரன்மாதேவி ஆகிய பிராந்தியங்களிலுள்ள சுமார் 200 ஆசிரியர்கள் வேலை இழக்கவிருக்கிறார்கள்.

விக்கிரமசிங்கபுரம் சரகம் பசுக்கிடைவிளையிலுள்ள செயின்ட் ஜோசப் பாடசாலையில் ஆசிரியர்களாக இருக்கும் 17 பேரில் தலைமை ஆசிரியர் தவிர மற்ற 16 பேருக்கும் நோட்டீஸ் கொடுக்கப்பட்டுள்ளது.

கொட்டாரம் செயின்ட் சவேரியார் உயர்தர ஆரம்பப் பாடசாலையில் வேலை செய்யும் 11 ஆசிரியர்களில் 7 பேருக்கு நோட்டீஸ் கொடுக்கப்பட்டுள்ளது. விக்கிரமசிங்கபுரம் வட்டாரத்திலுள்ள 156 ஆசிரியர்களில் 90 பேர்வரை வேலை இழப்பார்கள். (தி. த)

யார் தம்புவது?

"நம்முடைய தமிழ் மொழி, ஆட்சி மொழியாக வேண்டும் என்று மொழிப்பற்று கொண்ட காரணத்தால் என்னை சட்டசபையிலிருந்து வெளியேற்றிவிட்டார்கள்."

—பழனி தமிழரசுக் கழக மாநாட்டில் ம. பொ. சி
—'தி த.': 21-3-54-

சர்ச்சில் விலகுவார்?

லண்டன், மார்ச் 21—

நியூஜிலாந்து சுற்றுப்பிரயாணத்திலிருந்து எலிசபெத் ராணி திரும்பியதும் சர்ச்சில் தமது பதவியை ராஜிநாமா செய்வாரென்று தெரிகிறது.

'தமிழுக்குள்ள தனிச் சிறப்பு இந்திக்கு அறவே இல்லை!'

காந்தியார் இந்தியில் பேசும் பல சமயங்களில் கவர்னர் காதுகளை மூடிக்கொண்டதுண்டாம்!

இந்தி மொழி தேசிய மொழியாக ஆக்கப்பட்டதில் பிரகாசா அதிருப்தி

இராஜபாளையம், மார்ச் 22—

"இந்தியைத் தேசிய மொழியாக்க வேண்டுமென்பதை நான் ஆதரித்ததேஇல்லை, என்னுடைய உடற் பாதுகாப்பிற்காக இதை நான் உங்களிடம் உறுதி கூறுகிறேன். உலகத்திலுள்ள மொழிகளில் மிகவும் அதிகமாக கொலை செய்யப்பட்ட மொழி இந்தி மொழிதான்; தாங்கள் பேசுவதுதான் சரி என்று பலர் பலவிதமாய் இந்தி மொழியைப் பேசுகிறார்கள். காந்தியடிகள் இந்தி பேசும்போதுகூட நான் பல சமயங்களில் காதுகளை மூடிக்கொள்ள நேர்ந்ததை இங்குகூற விரும்புகிறேன்."

"என்னுடைய மொழியில் திட்டுவதற்கு அநேக வார்த்தைகள் உள்ளன; தங்களுடைய தாய்மொழி வேறாக இருப்பவர்கள்கூட, கோபத்தில் பேச வேண்டுமென்றால் இம்மொழியின் ஆதரவைத் தான் நாடுகிறார்கள்."

—இவ்வாறு, திரு. பி. எஸ். குமாரசாமி ராஜாவின் இல்லம், 'காந்தி கலை மன்றத்'திற்கு வழங்கப்படுவது சம்பந்தமாக உரிமைப் பத்திரம் பொறிக்கப்பட்ட தகட்டைத் திறந்துவைத்துப் பேசுகையில், சென்னை கவர்னர் பிரகாசா கூறினார்.

மேலும் அவர் பேசுகையில் குறிப்பிட்டதாவது:—

"குறிப்பாக தமிழ் மொழி வளர்ச்சிக்காகத்தான் இந்த வீடு வழங்கப்படுகிறது. இந்த விழாவிற்கு வரும்படியாக இந்தி பேசும் என்னை வரவழைத்தது குறித்து நான் மகிழ்கிறேன்; உங்களுடைய அழகான மொழியில் பேச முடியாதது எனக்குப் பெரிதும் துக்கத்தைத் தருகிறது."

'தமிழ் மொழியைப் பற்றி எனக்கு ஒன்றும் தெரியாவிட்டாலும், அதனுடைய அழகையும், சிறப்பையும் அறியும் வாய்ப்பு இம்மாகாணத்திற்கு வந்தது முதல் எனக்குக் கிடைத்திருக்கிறது. 2000 ஆண்டுகளாகப் பேசப்பட்டு வரும் இம்மொழி ஒன்றுதான் மாறுதல் அடையாமலிருக்கிறதென்றும், மற்ற உலக மொழிகள் அப்படியில்லை என்றும் கேள்விப்படுகிறேன். மற்ற மொழிகளுக்கு இச்சிறப்பு இருப்பதாக நீங்கள் கூறமுடியுமென்று நான் நினைக்கவில்லை. நிச்சயமாக இந்தி மொழிக்கு இச்சிறப்புக் கிடையாது."

பாரிசுக்கு இந்தியாவின் கடுமையான ஆட்சேபணை

—(:)—

அதிகாரிகள் எடுக்கும் நடவடிக்கை குறித்து டில்லியின் கவலை!

புதுடில்லி, மார்ச் 21—

பிரெஞ்சிந்தியப் பகுதிகள் இந்தியாவுடன் இணைய வேண்டுமென மக்கள் ஏகமனதாகத் தீர்ப்பளித்திருப்பதை யொட்டி, புதுச்சேரியிலுள்ள பிரெஞ்சு அதிகாரிகள், அந்த இணைப்புக் கோரிக்கையை ஆதரிக்கும் பிரெஞ்சு மக்களை பயமுறுத்த எடுத்திருக்கும் நடவடிக்கைகளைக் குறித்து இந்திய சர்க்கார் கடுமையான ஆட்சேபக் குறிப்பொன்றை பிரெஞ்சு சர்க்காருக்கு அனுப்புகிறது.

இணைப்பு இயக்கத்தை ஆதரித்து ஆர்ப்பாட்டங்கள் ஏதும் நடத்தக் கூடாதென மக்களை எச்சரிப்பதற்காக போலீசுக் கோஷ்டிகளை பல்வேறு பகுதிகளுக்கு பிரெஞ்சு அதிகாரிகள் அனுப்பியிருப்பதாகத் தெரிகிறது.

லீக் தோல்வி இந்தி வெறியர்களுக்கு ஒரு படிப்பினை

—:o:—

கி. வங்க தேர்தல் முடிவு குறித்து பண்டித நேரு

"கிழக்கு வங்கத்தில் தேர்தல் முடிவுகளுக்கு மொழிப் பிரச்சினை ஒரு முக்கிய காரணம்," என்று பார்லிமெண்டரி காங்கிரஸ் கட்சிக் கூட்டத்தில் நேரு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் பேசுகையில், இந்தியாவிலுள்ள மொழிப் பிரச்சினையைக் குறிப்பிட்டு, 'ஒவ்வொரு குழந்தைகளுக்கும் அதன் தாய்மொழியிலேயே கல்வி போதிக்க வேண்டியதின் அவசியத்'தை வற்புறுத்தினார்.

"தேசிய மொழி தக்க முறையில் அபிவிருத்தியடைவதுடன், பிரதேச மொழிகளிலும் தக்க கவனம் செலுத்தவேண்டும்" மென்றார்.

ஐ. மு.-வுக்கு 188; லீகுக்கு 7!

கிழக்கு வங்கத் தேர்தல் நிலைமை

டாக்கா, மார்ச் 22—

கிழக்கு வங்க தேர்தலில் இதுவரை முடிவு தெரிந்ததில், ஐக்கிய முன்னணிக்கு 188-ம் முஸ்லீம் லீகுக்கு 7-ம் கிடைத்துள்ளன.

நூருல் அமீன் மந்திரி சபையில் ஷெட்யூல் வகுப்பு மந்திரியும், தனித் தொகுதியை ஆதரித்தவரும், லீக் அபேட்சகருமான பரோரியை, ஷெட்யூல்டு வகுப்பு சம்மேளனத்தின்சார்பில் நின்றவரும், கூட்டுத் தொகுதியை ஆதரித்தவருமான சௌர்சந்திர பாலா தோற்கடித்தார். வெற்றி பெற்றவருக்கு 16 864 வோட்டுகளும், தோற்றவருக்கு 1,949 வோட்டுகளும் கிடைத்தன.

• • •

எல்லா மந்திரிகளும் தோற்றனர்!

டாக்கா, மார்ச் 20—

கிழக்கு பாகிஸ்தானில் அமீன் மந்திரி சபையிலிருந்த ஐந்து மந்திரிகளும் தோற்றுவிட்டனர். கடைசியாக இன்று தோற்றவர் தொழில் மந்திரி சலீம். அவர் ஜாமீனையும் பறிகொடுத்தார். மாகாண முஸ்லீம் லீக் பொக்கிஷதார் என்ற பெருமையும் இவருக்கு உண்டு. இதுவரை 50 லீகர்கள் ஜாமீன் இழந்துள்ளனர்.

பதவியிலிருந்து மந்திரி நீக்கம்!

கராச்சி, மார்ச் 22—

சிந்து மராமத்து மந்திரி காஜி அப்துல் மன்னான் பதவியிலிருந்து கவர்னர் நீக்கிவிட்டதாகத் தெரிகிறது.

விசேட கெஜட்டில் இந்த விஷயம் அறிவிக்கப்பட்டது. அவர் நீக்கப்பட்டதற்குக் காரணம் எதுவும் தெரிவிக்கப்படவில்லை.

சிந்து அசெம்பிளியையும் காலவரையின்றி கவர்னர் ஒத்திவைத்திருப்பதாகத் தெரிகிறது.

இந்தியில் பாடம் போதிக்கும் கொள்கை அமுல்

தள்ளிவைக்க அமைச்சர் மறுப்பு

பம்பாய், மார்ச் 20—

மாகாணத்தில் 1955-ம் ஆண்டு முதல் கல்லூரிகளில் இந்தி மொழியில் பாடங்களைக் கற்பிக்க வேண்டுமென்ற அரசாங்கக் கொள்கையை அமுல் நடத்துவதைத் தள்ளிவைக்கும்படி நேற்று பூனா பல்கலைக் கழகத்தினர் விடுத்த வேண்டுகோளை பம்பாய் அரசாங்கக் கல்வி அமைச்சர் தின்கர் ராவ் தேசாய் ஏற்க மறுத்துவிட்டார்.

சி. ஆர். உடல்நிலை

★

சென்னை, மார்ச் 21—

முதல் மந்திரி சி. இராஜகோபாலாச்சாரியார் கடுமையான காய்ச்சல் கண்டு மிகவும் பலவீனமடைந்துள்ளார். அவர் சில நாட்களாகவே சட்டசபைக் கூட்டங்களுக்கும் வரவில்லை; சட்ட சபை காங்கிரஸ் கட்சிக் கூட்டத்திற்கும் செல்லவில்லை.

பெரியார் உடல்நிலை

★

சென்னை, மார்ச் 21—

திராவிடர் கழகத் தலைவர் பெரியார் ஈ. வெ. ரா. மீண்டும் உடல்நலம் குன்றி இருக்கிறார். காலையில் படுக்கையிலிருந்து எழுந்திருக்கும்போதே அவருக்கு மயக்கமும் களைப்புமாக இருக்கிறது; ஆகவே, அவரால் எந்த வேலையையும் சரிவர கவனிக்க முடிவதில்லை.

நம் நாடு
தி.மு.க. தினஇதழ் ஆசிரியர்: அண்ணாதுரை
சென்னை 22—3—1954 திங்கள்

இன்னும் என்ன?

இந்திய துணைக் கண்டத்திலிருந்து ஆங்கில ஏகாதியத்தியம் நீங்கிவிட்டபோதிலும், இங்கு வந்த மற்ற பிரெஞ்சு, டச்சு, போர்ச்சுகீஸ் ஆதிபத்தியங்கள் இன்னும் சிறு, சிறு திட்டுகளில் ஒட்டிக் கொண்டிருக்கத்தான் செய்கின்றன. வாள் முனையைக் காட்டி, துப்பாக்கிக் குண்டு தளவாடங்களை வைத்துக்கொண்டு, பெரிய நிலப்பரப்பைக் கட்டியாள முடியும் என்ற நம்பிக்கை, "சூரியன் மங்காத சாம்ராஜ்யத்தைக் கட்டியாண்ட" பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்திற்கே போய்விட்டது. இனி ஏகாதியத்தியத்தின் கொடியின்கீழ் இப்பெரும் துணைக் கண்டத்தை ஆளுவது கஷ்டமானது என்பதுடன், லாபமும் கிடையாது என்ற நிலையில்தான் ஆங்கில ஏகாதிபத்தியம் தனது பிடியைத் தளர்த்தி, கூட்டுறவு முறையில் தனது தொடர்பையும், நிலையையும் பாதுகாத்துக் கொண்டது. பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்திற்குத் தோன்றிய அரசியல் தந்திரமும், முன்னேக்கமும், மற்ற ஐரோப்பிய வல்லரசுகளுக்கு ஏற்படவில்லை. அதனால்தான இந்தியாவை விட்டு ஆங்கில ஏகாதிபத்தியம் நீங்கிய பின்னும், சிறு சிறு ஊர்களில் ஆதிக்கம் செலுத்துகிற பிரெஞ்சு, டச்சு, போர்ச்சுகீஸ் ஏகாதிபத்தியங்கள் விலக மறுத்து வருகின்றன.

இந்தியா விடுதலைப் பெற்றதும், பிரெஞ்சு ஆதிபத்தியத்தின் கீழ் இருக்கும் புதுச்சேரி, காரைக்கால் பகுதிகளும், இந்தியாவுடன் இணைக்கப்பட வேண்டும் என்ற கிளர்ச்சி எழுப்பப்பட்டது. ஆனல், பிரெஞ்சு ஆதிபத்தியம் அதை ஏற்றுக்கொள்ளவில்லை. மேலும், அந்த இடங்களிலிருந்த அரசியல் சூழ்நிலை, பிரெஞ்சு அரசாங்கத்துக்கு ஆதரவு தரும் வகையிலேயே இருந்தது. அதனல் வெளியிலிருந்து வரும் குரலை மதிக்காமல் பிரெஞ்சு அரசாங்கத்தால் இருக்க முடிந்தது.

ஆனல், இன்று நிலைமை மாறிவிட்டது. பிரெஞ்சிந்தியாவிலுள்ள எல்லா முனிசிபல் சபைகளும் பிரெஞ்சிந்திய பகுதிகள் இந்தியாவுடன் இணைந்துவிட வேண்டுமென்று தீர்மானித்துவிட்டன. பிரெஞ்சிந்திய மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டு, அந்த இடங்களில் பெரும்பான்மை அரசியல் கட்சியாக விளங்கிவந்த சோஷலிஸ்ட் கட்சியும், பிரெஞ்சிந்திய மந்திரிகளாக இருக்கும் அதன் தலைவர்களும் இணைப்புத் தீர்மானத்துக்கு ஆதரவு தந்துள்ளனர்.

இந்தத் திடீர் மாறுதலைகளுக்கு, காரணங்கள் எவை கற்பிக்கப்பட்ட போதிலும், மககளின் முடிவும், முக்கிய பிரதிநிதிகளின் தீர்மானமும் மிகத் தெளிவாக இருக்கின்றன, பிரெஞ்சு ஆதிபத்தியம் அந்த இடங்களை விட்டு வெளியேறிவிட வேண்டுமென்று! ஆகலால் முன்போல், அந்த இடங்களில் இருந்த குழப்ப நிலையையும், தனக்கு இருந்த ஆதரவையும் வைத்துககொண்டு பிரெஞ்சு ஆதிபத்தியம் அலட்சியமாக இருந்துவிட முடியாது. ஆங்கில ஆதிபத்தியத்திற்கிருந்த மதியூகமும், முன்னேக்கமும் பிரெஞ்சு ஆதிபத்தியத்திற்கும் இருந்தால், இப்பொழுதே அது தனது வெளியேறும் படலத்தைத் தொடங்கிவிடலாம். பிரெஞ்சு ஏகாதிபத்தியம் இந்தியாவை விட்டு நீங்க வேண்டுமென்பதற்கு, இப்பொழுது மக்களிடையும், அரசியல் கட்சியினரிடையும் ஏற்பட்டுள்ள பெருத்த கிளர்ச்சியே நல்ல எடுத்துக்காட்டாக, அறிவிப்பாக இருக்கிறது. இதைவிட விளக்கம் தரவல்ல அறிவிப்பு ஏற்பட முடியாது.

ஆனல், மக்களின் மன நிலையை அறியாமல், காலத்தின் போக்கு மாறிவிட்டது என்பதை உணராமல், பழைய ஏகாதிபத்திய வெறியிலேயே, ஆணவப் போக்குடன் பிரெஞ்சு அரசாங்கம் நடந்து கொண்டால், நிலைமை சீர்கேடடைந்து, விபரீதப் போக்கை அடையலாம்; மக்களின் ஆதரவை இழந்துவிட்ட நிலையில், போர்க் கப்பல்களை அனுப்பியோ, இரும்புத் தொப்பியணிந்த போர் வீரர்களைத் திரளச் செய்தோ, தனது ஆதிபத்தியத்தை நிலைநாட்ட பிரெஞ்சு அரசாங்கம் முயற்சிக்கலாம். ஏனென்றல், இந்தோ-சீனவில் அத்தகைய பெரியதொரு முயற்சியில்தான் பிரெஞ்சு அரசாங்கம் ஈடுபட்டிருக்கிறது. பிரெஞ்சு நாட்டுப் போர் வீரர்களின் இரத்தமும், அமெரிக்க நாட்டு டாலரும் அங்கே கணக்கின்றி கொட்டப்படுகின்றன; ஆனல், அவை பிரெஞ்சு ஆதியத்தியத்தைக் காப்பாற்றியதா அல்லது காப்பாற்றுமா என்றல், இல்லை என்றுதான் சொல்ல வேண்டும். பல ஆண்டுகள் பலமாகப் போராடியும், பிரெஞ்சு அரசாங்கத்தால் நிலைமையைச் சமாளிக்க முடியவில்லை. நாளுக்குநாள் அது பலவீனமடைந்து கொண்டுதான் வருகிறது. காரணம், அதன் போரிடும் திறமையும், அனுப்புகிற யுத்த தளவாடங்களின் பலமோ குறைந்துவிட்டது என்று அர்த்தமல்ல; தனது வசதிக்கு மிகுந்த அளவில் அமெரிக்காவின் உதவியையும் பெற்றுத்தான் அது போராடுகிறது.

ஆனல் ஏகாதிபத்தியத்திற்கு இருந்த காலம் மாறிவிட்டது. வெள்ளை ஏகாதிபத்தியங்கள் காலனி நாடுகளைக் கட்டியாள வேண்டும், கட்டியாள முடியும் என்று ஆள்பவர்களும், ஆளப்படுபவர்களும் ஆக இருவரும் நம்பிக்கொண்டிருந்த கருத்துக்கள் மாற்றப்பட்டு விட்டன. அதனல்தான் விடுதலை வேட்கையை, மக்கள் மனதில் மூண்டெழுந்துள்ள கிளர்ச்சியை வெறும் துப்பாக்கிகளைக் காட்டி அடக்கிவிட முடியவில்லை.

புதுச்சேரி, காரைக்கால் பகுதிகளில் அத்தகைய சண்டையிடும் நிலைமை மூளவில்லை. ஆனல் கண்மூடித்தனமான முறையில் பிரெஞ்சு அரசாங்கம், நடந்து கொண்டால், அமைதி கெடக்கூடிய நிலைக்கு அது செல்லக்கூடும். மற்ற இடங்களில் பெற்றுள்ள பாடத்தை மனதில் வைத்து ஆங்கில ஏகாதியத்திபத்தியம் நடந்து கொண்டதைப்போல மிக அமைதியான முறையில் இந்த இடங்களைவிட்டு பிரெஞ்சு ஆதிபத்தியம் விலகிவிட வேண்டும். அப்படிச் செய்தால, இரு நாடுகளும் வீணையும் வீண் சேதங்களையும், சச்சரவையும் தடுப்பதுடன், அமைதியும், நல்லுறவும் வளர்வதற்கும் இடமளிக்கும். மக்களின் எண்ணத்துக்கு மதிப்புத் தந்து, நேசபாவத்தை வளர்க்கும் விதத்தில் பிரெஞ்சு அரசாங்கம் நடந்து கொள்ளுமென்று எதிர்பார்க்கிறோம்.

தூத்துக்குடி—கல்லக்குடி வழக்கு நிதி வசூல்

தூத்துக்குடி, கல்லக்குடி வழக்கு நிதிக்கு வசூல் செய்து ரூபாய் வைத்துக்கொண்டிருக்கும் நண்பர்களும், கிளைக் கழகத் தோழர்களும் உடனே வசூல் ரூபாய் வரவு விபரங்களை தலைமைக் கழகத்திற்கு அனுப்பி வைக்க வேண்டுகின்றோம்.

"பொதுக் கூட்டங்கள், நாடகங்கள் வசூல் மூலம் ரூபாய் எங்களிடம வந்திருக்கிறது; விரைவில் அனுப்பி வைக்கின்றோம்," என்று கடிதம் எழுதிய தோழர்கள், நாளதுவரை பல கடிதங்கள் எழுதியும் ரூபாய் அனுப்பாமல் அலட்சியமாக இருக்கிறார்கள்.

1954 மார்ச் முடிய கணக்குகள் வரவு - செலவு முடிக்க வேண்டியிருப்பதால், இனியும் காலம் கடத்தாமல் உடன் அன்புடன் ரூபாய் அனுப்பி வைக்குமாறு வேண்டுகின்றோம்.

இதுவரை தூத்துக்குடி. கல்லக்குடி வழக்கு நிதிக்காக வசூலிக்கப்பட்டு தலைமைக் கழகத்திற்கு ரூபாய் வந்து சேர்ந்துள்ளவைகட்கு வசூல் விபரம் "நம் நாடு" இதழில் இனி தொடர்ந்து வெளியிடப்படும்.

தூத்துக்குடி-கல்லக்குடி வழக்கு நிதிக்காக பொது மக்களிடம் இனி வசூலிக்க வேண்டாம் என்றும் அன்புடன் கேட்டுக் கொள்ளுகின்றோம்.

இதுவரை வசூலிக்கப்பட்ட தொகைகளை மட்டும் நம் தோழர்கள் இனியும் காலம் கடத்தாமல் உடனே அனுப்பி வைக்குமாறு அன்புடன் வேண்டிக்கொள்கின்றோம்.

பொதுச் செயலாளர் அண்ணாதுரை அவர்களைப் பொதுக் கூட்டத்திற்கு அழைக்கப்பட்டு, மேற்படி நிதிக்கு உதவுவதாக வாக்களித்ததோழர்களும் வசூலித்ததொகையைஇங்குஅனுப்பி வைத்துவிடலாம், உடல்நலம் பெற்றதும் தேதி குறிப்பிடுவார்கள்.

தி.மு.க. தலைமை நிலையம்,
'அறிவகம்'
இராயபுரம், சென்னை-13.

பொறுப்பாளர்,
தூத்துக்குடி, கல்லக்குடி
வழக்கு நிதி

ரெவின்யூ இலாகாவில் ஒழுங்கு நடவடிக்கை

23 என். ஜி. ஓக்கள் டிஸ்மிஸ்!

சென்னை, மார்ச் 20—

1949-ம் ஆண்டு ஜனவரி மாதம் 1-ந் தேதி ஒழுங்கு நடவடிக்கை எடுப்பதற்கான விசாரணைக் கோர்ட் ஏற்படுத்தப்பட்டது.

1949 முதல் 1953 வரை, ரெவின்யூ இலாகாவில் அக் கோர்ட்டு சிபார்சின் பேரில் 23 வழக்குகளில் என். ஜி ஓக்கள் டிஸ்மிஸ் ஆன ஒரே ஒரு என். ஜி. ஓ. மட்டும் மீண்டும் அமர்த்தப்பட்டார்.

இத்தகவல்களை ரெவின்யூ மந்திரி சட்டசபையில்தெரிவித்தார்.

ஜப்பான் முறையில் சாகுபடி

சென்னையில் ஒரு லட்சம் ஏகரா!

புதுடில்லி, மார்ச் 20—

நடைமுறை ஆண்டில் 20 லட்சம் ஏகரா நிலத்தில் ஜப்பானிய முறையில் சாகுபடி செய்வதென இந்திய விவசாய இலாகா தற்காலிகமாக ஒரு வரம்பு ஏற்படுத்தியிருக்கிறது.

சென்னையில் ஒரு லட்சம் ஏகராவும் ஆந்திராவில் ஒன்றரை லட்சம் ஏகராவும் என இலக்கு நிர்ணயத்திருக்கிறது.

பெர்லினில் மிகப் பெரிய நூல் நிலையம்

6 லட்சம் புத்தகங்கள் வைக்கப்படும்!

பெர்லின், மார்ச் 20—

ஐரோப்பாவிலுள்ள மிகப் பெரிய இலவச நூல் நிலையங்களில் ஒன்று இவ்வாண்டு ஜூன் மாதத்தில் மேற்கு பெர்லினில் ஆரம்பமாகும். அமெரிக்கா அளித்துள்ள 13 லட்சம் டாலர் உதவியால் ஐந்து அடுக்கு மாளிகை ஒன்று இதற்காகக் கட்டப்பட்டுள்ளது. புத்தகங்கள் வாங்குவதற்கும் இத் தொகையிலிருந்து பணம் ஒதுக்கப்பட்டுள்ளது. இந்நூல் நிலையத்தில் 6 லட்சம் புத்தகங்கள் வைக்க இடவசதியுள்ளது. ஜூன் மாதத்தில் இங்கு 110000 புத்தகங்கள் இருக்குமென எதிர்பார்க்கப்படுகிறது. இம்மாளிகையில் ஒரு சொற்பொழிவு அரங்கு, குழந்தைகள் நூல் நிலையம், பெர்லின் சரித்திரத்தைவிளக்கும் நூல் நிலையம், இசைத் தட்டுகளின் அறை முதலியவை இருக்கும்.

தானியம் கெடாமலிருக்க அணுசக்தி

சென்னை, மார்ச் 20—

அணுசக்தியை உபயோகித்து 'ஓட்ஸ்' என்னும் தானியத்தைக் கெடுதி வராமல் பாதுகாக்க முடியுமென சமீபத்தில் நடைபெற்ற ஆராய்ச்சியின் மூலம் தெரிய வருகிறது. உலகத்திலுள்ள எல்லா நாடுகளிலும் விவசாயிகளுக்கு இதனல் நல்ல பலன் கிடைக்குமென்று எதிர்பார்க்கப்படுகிறது.

ஆரோக்கியம் அங்கே! தொத்து நோய்கள் இங்கே!!

—(:)—

படிப்பின்மையும், பணமுடையும்தான் இதற்குக் காரணமா?

சென்னை, மார்ச் 19—

"போஷாக்கு மூலமும், சுகாதார வசதிகள் மூலமும் மேலைநாடுகள பெரிய வியாதிகளைத் தடுத்து ஆரோக்கியத்தில் முன்னேற்றம் அடைந்திருக்கின்றன; ஆனல், நம் நாட்டில் தொத்துநோய்களும், போஷாக்கு இன்மையால் ஏற்படும் நோய்களும் பெரிய பிரச்னையாக இருந்துவருகின்றன. குடியிருப்பிடங்கள் மோசமாக இருப்பதும், ஏழ்மை, படிப்பின்மையும், மக்கள் தொகை பெருக்கமும், பணமுடையும்தான் அதற்கு முக்கிய காரணங்களாகும்,"

—என்று சுகாதாரத்திற்கு மானியம் ஒதுக்கும்படி கோரி, சென்னை சட்டசபையில் சுகாதார மந்திரி பேசுகையில் கூறினர்.

தொடர்ந்து அவர் குறிப்பிட்டார்:—

பிளேக், காலரா, வைசூரி போன்ற கொள்ளை நோய்களைத் தடுப்பதிலேயே சர்க்கார் கவனம் செலுத்தி வந்திருக்கிறது; பிளேக் நோய் அநேகமாக ஒழிந்துவிட்டதென்றே கூறலாம்; ஆனல் 'டைபாய்டு' போன்ற நோய்களை தீவிரமாக ஒழித்துக் கட்டுவதற்குச் சுத்தமான குடி தண்ணீர், ஆரோக்கியமான உணவு சாக்கடை ஆகிய வசதிகளுக்கு ஏற்பாடு செய்தாக வேண்டும்.

மலேரியா தான் நமது சுகாதாரத்திற்கு முதல் எதிரி! அதைக் கட்டுப்படுத்துவதற்கு நமது தேசியத் திட்டத்தில் முதலிடம் அளிக்கப்பட்டிருக்கிறது.

"1953—54க்கு சென்னை மாநிலத்திற்கு, இரண்டு 'மலேரியா' கண்ட்ரோல் யூனிட்டுகள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன; அவை ஒவ்வொன்றும் 10 லட்சம் மக்கள் தொகையினருக்குப் போதுமான பாதுகாப்பளிக்கும்.

"சேலம், சென்னை, ஈரோடு போன்ற நகரங்களில் மலேரியா ஒழிப்புக்கு சென்னை சர்க்கார் மேலும் ஒரு யூனிட் கேட்க உத்தேசித்திருக்கிறது.

"கொசு மூலம் உண்டாகும் பைலேரியா நோய் மலேரியாவுக்கு இரண்டாவதாகும்; சர்க்கார் மானிய உதவியுடன் அந்நோய்த் தடுப்புக்கு, சுமார் 54 திட்டங்களை இந்த மாநிலத்தில், ஸ்தல ஸ்தாபனங்கள் நடத்தி வருகின்றன. அடுத்த ஆண்டு மேலும் 12 திட்டங்களுக்கு அனுமதி அளிக்கப்பட்டிருக்கிறது. கிராமங்களில் இப்போதுள்ள மருத்துவ சர்வீசுகளை பரப்புவதற்கு இந்திய சர்க்காரிடமிருந்து மற்றொரு திட்டம் வந்திருக்கிறது. நிலையத்திற்கு ரூ. 2,000 வீதம் கருவிகளுக்காகும் செலவை இந்திய சர்க்கார் ஏற்க சம்மதித்திருக்கிறது," என்றார்.

வேலூர், மார்ச் 20—

கல்லக்குடி போராட்டத்தில் ஈடுபட்டு மூன்று திங்கள் சிறை தண்டனைபெற்ற தோழர் கா. ச. அ முகம்மது அலி, ஊர் ஆட்சி மன்றத் தலைவர் தலைமையில் 18—3—54 காலை 6-45 மணிக்கு ஈருருளை வண்டியில் ஏறி, இடையில் இறங்காமல் 19—3—54 மாலை 6-45 மணி முடிய 36 மணி நேரம் சவாரி செய்தார்.

புதிய கல்வி திட்டம்—உரிய காலத்தில் சென்னை நகரசபை தீர்ப்பளிக்கும்?

—o—

குழந்தைகளின் நன்மைக்கு ஏற்ற திட்டமா என்பதை திட்டவட்டமாகத் தெரிவித்துவிடும்?

சென்னை, மார்ச் 20—

"ஆரம்பக் கல்வித் திட்டத்தை பல கஷ்டங்களுக்கிடையில் நாம் நடத்திவரும் பொழுது, புதிய ஆரம்பக் கல்வி திட்டத்தை சென்னை நகரிலும் விஸ்தரிக்கப் போவதாக உத்தேசிக்கப் பட்டிருக்கிறது; இக்தருணத்தில் இதைப் பற்றி நான் ஒன்றும் கூறத் தேவையில்லை; ஆனால், உரிய காலத்தில், தனனிடத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ள ஆயிரக் கணக்கான குழந்தைகளின் நன்மைக்கு உகந்தது எது என்று நகரசபை திட்டவட்டமாகத் தெரிவித்துவிடும் என்பதில் சந்தேகமில்லை."

"பாடத் திட்டங்களையும், குறிக்கோள்களையும் அடிக்கடி மாற்றுவதால் கல்வியில் சீரான போக்கு தடைப்படுவதுமன்றி, வரவு—செலவு திட்டத்தில் தடுமாற்றம் ஏற்படுகின்றது என்பதை இந்தச் சமயத்தில் நான் கூறினால் போதுமானது; இக்காலத்தில் ஒவ்வொரு கல்வி திட்டத்துக்கும் பெரும் செலவாகின்றது; மேலும் புதிய எந்தச் சுமையையும் ஏற்றுக்கொள்ளும் நிலைமையில் இந்த நகரசபை இல்லை,"

இவ்வாறு சென்னை நகரசபையின் 1954—55-ம் ஆண்டின் வரவு-செலவு திட்டத்தை சமர்ப்பித்துப் பேசுகையில், கல்வி கமிட்டித் தலைவி தோழியர் டி. என். அனந்தநாயகி குறிப்பிட்டார்.

பருத்தி சூதாட்டத்தை ஒடுக்க விசேட போலீஸ்

சென்னை, மார்ச் 20—

"நியூயார்க் பருத்தி" சூதாட்டத்தை தடுப்பதற்கு சென்னை நகரில் ஒரு விசேட போலீஸ் படை நிறுவப்பட்டிருக்கிறது.

4 இன்ஸ்பெக்டர்கள், 4 சப்-இன்ஸ்பெக்டர்கள், வேறு பல ஹெட்கான்ஸ்டேபிள்கள், கான்ஸ்டேபிள்கள் அப்படையிலிருப்பர்.

தொழிலாளர்களின் வாழ்க்கைப் புள்ளி

சென்னை, மார்ச் 20—

சென்னை நகரில் பிப்ரவரி மாதம் தொழிலாளர் வகுப்பினர் வாழ்க்கைச் செலவு குறியீட்டு எண். 352 புள்ளியாக இருந்தது.

வெளியூர்களில் குறைந்த சம்பளம் வாங்குவோரின் வாழ்க்கைத் தரப் புள்ளி ஜனவரியில் இருந்த நிலை வருமாறு:—கடலூர்: 379; திருச்சி: 363; மதுரை: 365; கோயம்புத்தூர்: 412.

உங்கள் குறிப்புக்கு!

சென்னை, மார்ச் 20—

1951—52-ல், சென்னை அரசாங்கத்தின் பஸ் போக்குவரத்து சர்வீஸ் மொத்த வருமானம் ரூ 1,20,90,176;—செலவு ரூ 1,10,40,628.

1952—53-ல் வருமானம் ரூ 1,17,80,336; — செலவு ரூ 1,15,28,082.

நகர பஸ் சர்வீசில் இப்போது 381 பஸ்கள் இருக்கின்றன.

சென்னை சட்டசபையில் தொழில் மந்திரி இதைத் தெரிவித்தார்.

டென்சிங்குக்கு அனுமதி மறுப்பு!

நியூயார்க், மார்ச் 20—

எவரெஸ்ட் வீரர் டென்சிங் நார்கே அமெரிக்காவுக்கு வருவதாக இருந்தது என்றும், ஆனால் மேற்கு வங்க சர்க்கார் அவருக்கு அனுமதியளிக்க மறுத்துவிட்டதென்றும் அமெரிக்க மலையேறிகள் கிளப் தலைவர் டாக்டர் எட்வர்ட் வீயர் கூறுகிறார். அனுமதி மறுக்கப்பட்ட காரணம் தெரியவில்லை என்று அவர் கூறினார்.

பவுண்டரி தொழிலாளர் கோரிக்கை

சென்னை, மார்ச் 20—

பேசின் பவுண்டரி சங்கக் காரிய கமிட்டிக் கூட்டம் 16—3—54ல் தோழர் எம். சிங்காரம் தலைமையில் நடைபெற்ற போது, இத் தொழிற்சாலையில் போனஸ் கொடுக்க மறுப்பதைக் கண்டித்தும், டி காரணத்தை தீர்த்து வைக்க சர்க்கார் சமரச தொழில் கோர்ட் ஏற்படுத்த மறுப்பதைக் கண்டு வருத்தம் தெரிவித்தும், மேற்கண்ட குறைகளை பெற தொழிற்சாலை உள்ளிருந்து வேலை நிறுத்தம் செய்வதெனவும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

வழக்குகள்

சென்னை, மார்ச் 20—

1953 ஆண்டு சென்னை விவசாயிகள் கடன் நிவாரண அவசரச் சட்டம் பிறப்பிக்கது முதல் 3 மாதங்களில் 8 247 கடன் வசூல் தாவாக்கள் இந்த மாநிலத்தில் தாக்கலாயின; இதற்கு முந்தின ஆண்டில் இதே காலத்தில் 16,008 வழக்குகள் தாக்கலாயின.

நூல் நிலயம்-வாசகசாலை திறப்பு விழா

15—3—54ல், கடையநல்லூர் பஞ்சாயத்து நூல் நிலயம்—வாசகசாலையை நகரின் மத்தியிலுள்ள மெயின் பஜாரில், திரு. பி. சி வர்கீஸ் திறந்து வைத்து விழாவிற்குத் தலைமை வகித்தார். தலைவர் பேச்சுக்குப் பின், திருவாளர்கள் ஜே என். சங்கரநாராயணன், முகம்மது இப்ராஹிம், ம. ராமசுவாமியார், என். கே. காஜா முஹைதீன் ஆகியவர்கள் வாசகசாலையின் அவசியம் பற்றி பேசினர்.

கைத்தறி வாரக் கொண்டாட்டம்

வில்லிபுத்தூர், மார்ச் 20—

இந் நகர் ஆண்டாள் நெசவாளர் கூட்டுறவு உற்பத்தி விற்பனை சங்கச் சார்பில், 12—3—54ல், கைத்தறி வாரம் கொண்டாடப்பட்டது. மாலை 5 மணியளவில் ஊர்வலமொன்று புறப்பட்டு, நகர் முக்கிய வீதிகள் வழியாகச் சென்று மாலை 7 மணியளவில் நாயர் சதுக்கத்தை அடைந்தது தோழர் கை. ஜனிபாசன் தலைமையில், எம். என். இராமசாமி "கைத்தறியாளரும் பொது மக்களும்" என்பது பற்றி விரிவுரையாற்றினார்.

திருக்குறட் பிரசாரம்

குருகுலம், மாம்பாக்கம், சென்னை, தங்கசாலை, சிவனடியார் திருக்கூட்ட இடத்தில், 21—3—54 மாலை 4 மணிக்கு, திருவச் ஞானகம் ப. இராமநாத பிள்ளை அவர்களும், ஆசிரியர் இளவழகனார் அவர்களும் திருக்குறளில் 'அறவற இயல்' பற்றிச் சொற்பொழிவாற்றுவார்கள்.

****** *************

தஞ்சை மாவட்ட 2-வது தி. மு. கழக மாநாடுகள்

A. Y. A. நாடார் அவர்கள் தோட்டத்தில் நடைபெறும்

★

10—4—54 சனி:

சமூக சீர்திருத்த மாநாடு

தலைவர்:
தோழர் ஏ. கோவிந்தசாமி எம். எல். ஏ.

திறப்பாளர்:
தோழர் க. அன்பழகன், எம். ஏ.

★

11—4—54 ஞாயிறு

அரசியல் மாநாடு

தலைவர்:
தோழர் என். வி. நடராசன்

திறப்பாளர்:
தோழர் ஈ. வெ. கி. சம்பத்

★

பொதுச்செயலாளர்
அண்ணாதுரை
தி. மு. கழக முன்னணி வீரர்கள், மக்கள் சபை, சட்ட சபை உறுப்பினர்கள் கலந்துகொள்வார்கள்.

★

இரண்டு நாட்களிலும் தோழர் அண்ணாதுரை எழுதிய சீர்திருத்த இயக்க நாடகங்கள் நடைபெறும்

கட்டணம்: வரவேற்பாளர் ரூ 5 பிரதிநிதி ரூ 2; பார்வையாளர் ரூ. 1; பெண்களுக்கு அணா 8.

******** *********

செய்திச் சுருக்கம்

★

விஜயவாடா, மார்ச் 20—

மதுவிலக்கு பற்றிய ராமமூர்த்தி கமிட்டி அறிக்கையை அமுலுக்குக் கொண்டு வராவிட்டால், முன்னாள் மாமேயர் சத்தியாக்கிரகத்துக்கு தலைமை வகிக்க லட்சன்னாவுக்கு கே. எல். பி கட்சி அங்கீகாரமளித்திருப்பதாகத் தெரிகிறது.

• • •

வாஷிங்டன், மார்ச் 20—

ஆக்கவேலைக்கு அணுசக்தியை பயன்படுத்துவது பற்றி ரஷியாவிடம் அமெரிக்கா ஒரு உருப்படியான திட்டத்தை சமர்ப்பித்துள்ளதாக அறிவிக்கப்பட்டது. ரஷ்யாவும் அமெரிக்காவிடம் சில பிரரேபணைகளைச் சமர்ப்பித்துள்ளது.

* * *

ஏதென்ஸ், மார்ச் 20—

ரோட்ஸிலுள்ள பிரிட்டிஷ் தூதராலயத்தின் மீது 6000 ஆர்ப்பாட்டக்காரர்கள் இன்று கற்களை வீசினர். சைப்ரஸ் கிரீசுடன் இணைய வேண்டுமென்று கோரும் இயக்கத் தலைவர் இங்கு வந்ததைத் தொடர்ந்து ஆர்ப்பாட்டம் நடந்தது.

* * *

கட்டாக், மார்ச் 20—

இங்கு ஒரு கசாப்புக் கடையில் வெட்டப்பட்ட ஆட்டின் வயிற்றில் ஒரு அதிசயப் பிறவி இருந்தது. அதன் நெற்றி மூக்கு, மார்பு, முழங்கைகள் முதலியவை மனித அங்கங்களைப் போல் இருந்தது. அதன் கால்களும் குளம்புகளும் வெள்ளாட்டைப் போல் இருந்தன.

• • •

வாஷிங்டன், மார்ச் 20—

1953-54ம் ஆண்டில், சுதந்தர உலகத்தில், அரிசி உற்பத்தி 264,00,00,000 பவுண்டுகள் என அமெரிக்க வர்த்தக இலாகா மதிப்பிட்டுள்ளது. இது கடந்த ஆண்டு உற்பத்தியைவிட 9,00,00,000 பவுண்டுகள் அதிகமாகும்.

தமிழகத்தின் மண்ணில் மேலும் பல அரிய பொருள்கள்!

கால்சியம் சல்பேட் படிகங்களும், இரும்புக் கனிச் சத்தும் கண்டுபிடிப்பு!

கோயம்புத்தூர், மார்ச் 20—

கோயம்புத்தூர் மாவட்டம், பல்லடம் தாலுகாவில், பருத்தி விளையும் கரிசல் காட்டில் ஏராளமான ஜிப்சம் (கால்சியம் சல்பேட்) படிகங்கள் இருப்பதாகக் கோவை விவசாய ஆராய்ச்சிக் கழகத்தைச் சேர்ந்த இரு நிபுணர்கள் கண்டுபிடித்துள்ளனர்.

பூமிக்குள் 2 முதல் 8 அடி ஆழத்தில் ஜிப்சம் படிகங்கள் அகப்படுவதாகவும், ஒரு ஏகர் நிலத்தில் சுமார் 400 டன் படிகம் கிடைக்கும் என்றும் மதிப்பிடப்படுகிறது.

★

ஆரணிக்கு (வ. ஆ) அருகாமையிலுள்ள தேவிகாபுரத்தைச் சேர்ந்த வீராசாம்பனூர் கிராமத்தில், மொடையூர் மலைக் குன்றில் இரும்புக் கலந்த மண் கட்டிகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. டில்லியிலுள்ள ஆராய்ச்சிசாலைக்கு அவை அனுப்பப்பட்டதில் அவற்றில், இரும்பும், மற்ற உலோகங்களும் கலந்துள்ளதாகத் தெரியவருகிறது.

காங்கயம் தி. மு. கழக செயற்குழு கூட்டம்

13—3—54 இரவு 8 மணிக்கு செயற்குழு கூட்டம் தோழர் கே. என். தணிகாசலம் அறையில் கூடியது. அதுசமயம் 21-2-54ல் நடைபெற்ற பொதுக் கூட்டத்தின் வரவு-செலவு முதலியன பரிசீலனை செய்து ஏற்றுக்கொள்ளப்பட்டது பின்னர் தோழர்கள் எம். என். ராய், எம். ஆர் சாமியப்பா, வி வி. தனுஷ்கோடி ஆகியோர் மறைவுக்கு அனுதாபம் தெரிவித்துக் கொள்ளப்பட்டது.

பழையவத்தலக்குண்டு தி. மு. கழக பொதுக் கூட்டம்

14—3—54 மாலை 6 மணியளவில், தி மு. கழகச் சார்பில் ஓர் பொதுக் கூட்டம் தோழர் ஏ. பி. சாமி தலைமையில் நடைபெற்றது. அதுபோது, நிலக்கோட்டை தோழர்கள் சையது இப்ராகிம், மணப்பாறை மீ. சு. இளமுருகு ஆகியவர்கள், 'இன்றைய திராவிடத்தின் நிலையும் நமது கடமையும்' என்பது பற்றி சொற்பொழிவாற்றினர்.

காசிப்பட்டணம் தி. மு. கழகம்

14-3-54ல், செயற்குழு கூட்டம் தோழர் சென்னியப்பன் தலைமையில் நடைபெற்றது. அதுபோது, தோழர்கள் எம். என். ராய், வி. வி. தனுஷ்கோடி, என் ஏ. முத்து ஆகியோர் மறைவுக்கு அனுதாபம் தெரிவித்துக் கொள்ளப்பட்டது.

நரோடா தி. மு. கழகம்

கழக உறுப்பினர் தோழர் வி கருணாகரன் தாயார் ஆர். ஜானகி அம்மாள் இயற்கை எய்தியமைக்கு கழக உறுப்பினர்கள் அனுதாபம் தெரிவித்துக் கொள்ளுகின்றனர்.

கழகத் தோழர்களுக்கு

நாஞ்சில் மாவட்ட தி. மு கழக அலுவலகம் இடம் மாற்றப்பட்டிருப்பதால் கழகம் சம்பந்தமான கடிதங்களை கீழ்க்கண்ட முகவரிக்கு அனுப்பவும்:—

நாஞ்சில் மாவட்ட தி. மு. கழகம், எஸ். எம். டி. கட்டிடம். நாகர்கோவில்.

"இளைஞன் குரல்"

நாடகத்தில் இடையூறு செய்ய முயன்றவர்கள் ஏமாற்றம்!

தேவகோட்டை, மார்ச் 20—

கருணாநிதி கலை மன்றத்தாரால், 14—3—54 இரவு 10 மணிக்கு தோழர் இராம. வெள்ளையன் தலைமையில் "இளைஞன் குரல்" என்னும் நாடகம் நடைபெற்றது.

நாடக இறுதியில் தலைவர் இந் நாடகத்தை நடக்கவொட்டாது செய்வதற்காக இவர் செய்த தப்புப் பிரசாரங்களையும், வரம்பு மீறிய செயல்களையும், அதனால் மன்றத்தாருக்கு ஏற்பட்ட இன்னல்களையும் எடுத்துரைத்தும், பல தடங்கல்களுக்கிடையே நாடகம் நல்ல முறையில் நடந்தது குறித்தும் பேசினார்.

பிறகு செயலாளர் உ. சிவாசன் பேசும்போது, ஒருவர் குழப்பம் விளைவிக்க முயற்சிக்கையில், பொதுமக்கள் அவரை வெளியே கொண்டு போய்விட்டு அமைதியை நிலை நாட்டினர் என்று கருணாநிதி கலை மன்றச் செயலாளர் தெரிவிக்கிறார்.

பெயர் சூட்டு விழா

தாராவி, (பம்பாய்) மார்ச் 20—

14-3-54 அன்று மாலை 6-30 மணிக்கு, தோழர் கே. எம். பிரகாசம் அவர்கள் ஆண் மகவுக்கு, பெயர் சூட்டு விழா தோழர் எல். செல்லச்செழியன் தலைமையில் எண். 72 பால்வாடியில் நடைபெற்றது. குழந்தைக்கு "பன்னீர்செல்வம்" என பெயரிடப்பட்டது. 'குழந்தை வளர்ப்பு' என்பது பற்றி தோழர்கள் அப்புக்குட்டி, எஸ். மகாராசன், மா. இரா. ஏ. ரெத்தினசாமி, எஸ். வள்ளிநாயகம், எஸ். தியாகராசன், சி. த. மு. இர. ஆரியசங்கரன் ஆகியோர் சொற்பெருக்காற்றினர். குமாரி சுதாவின் நடனமும், திருவள்ளுவர் கலா மன்றத்தாரால் இன்னிசை விருந்தும் அளிக்கப்பட்டன.

இதன் நினைவாக தூத்துக்குடி வழக்கு நிதிக்கு ரூபாய் ஐந்து நன்கொடையளிக்கப்பட்டது.

திருந்திய திருமணம்

சிவகெங்கை, மார்ச் 20—

17-3-54ல், தோழர் நில்லைச் சபாபதிக்கும் தோழியர் பிச்சையம்மாளுக்கும் தோழர் வேலாயுதம் தலைமையில் திருந்திய திருமணம் நடைபெற்றது தோழர் கோ. மணவாளன் சொற்பொழிவாற்றினார். மணமுறாவின் நினைவாக பஜித் நிலையப் படிப்பக வளர்ச்சிக்காக ரூ. 2 நன்கொடை அளிக்கப்பட்டதென அறிவிக்கப்படுகிறது.

மறைவு

குள்ளக்காபாளையம் தி. மு. கழக உறுப்பினரும், ரயில் நிறுத்தத்தில் 6 வார சிறைத் தண்டனை பெற்றவருமான போத்தனூர் தோழர் அ. ராமசாமி 15—3—54-ல் இயற்கை எய்தியதை ஆழ்ந்த வருத்தத்துடன் அறிவிக்கிறோம். அவர்தம் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்ளுவதாக குள்ளக்காபாளையம் தி. மு. கழக உறுப்பினர்கள் அறிவிக்கின்றனர்.

டெல்லி, மார்ச் 20—

இந்தியா முழுவதும் 350 குழாய்க்கிணறுகள் (போர்வெல்) அமைக்க உத்தேசிக்கப்பட்டிருக்கிறது; அவற்றில் 50 சென்னை மாநிலத்தில் இருக்கும்; டெல்லியில் மட்டும் 10 இருக்கும்.

"சமுதாய ஏற்றத் தாழ்வு நீங்கினலன்றி பொதுவுடைமைகொள்கை வெற்றிபெருது"

— (:) —

சிங்காரவேலர் நினைவுப் படிப்பக ஆண்டு விழாவில் தோழர் என். எஸ். இளங்கோ முழக்கம்

மதுரை, மார்ச் 20—

"சமுதாயத்தில் உள்ள ஏற்றத் தாழ்வான குறைபாடுகள் முதலில் நீக்கப்படாத அளவில் பொதுவுடைமைக் கொள்கைகள் போதுமான வெற்றியைக் கொடுக்காது என்பதை தோழர் சிங்காரவேலர் உணர்ந்தார்; அதற்கேற்ற வகையில் அவர் அரும்பாடுபட்டுப் பணியாற்றினர்; அவருடைய கொள்கைகளை நாட்டில் பரப்புவதற்கு நாம் முயற்சி எடுத்துக் கொள்ள வேண்டும்,"

—என்று கோரிப்பாளையத்திலுள்ள சிங்காரவேலர் நினைவுப் படிப்பகத்தின் இரண்டாவது ஆண்டு விழா, 14—3—54-ல் தல்லாகுளம் தமுக்கம் மைதானத்தில் நடைபெற்றபோது. தோழர் என். எஸ். இளங்கோ குறிப்பிட்டார்.

கூட்டத்திற்கு தோழர் மு. நடராசன் தலைமை வகித்தார்.

மதுரை மாவட்ட துணைச் செயலாளர் தோழர் எம். அய்யாச்சாமி பேசியதாவது:—

"சிங்காரவேலர் உண்மையிலேயே மனிதச் சமுதாயத்தில் சாதி வேறுபாடுகள் இருக்கக்கூடாது என்பதற்காகவே பாடுபட்டார்; சமதர்மக் கொள்கையை, இன்றுள்ள பொதுஉடைமைக் கட்சிக்காரர்கள் கூறுவதைப்போல் அல்லாமல் தொழிலாளர்கள் மத்தியிலே தோற்றுவிப்பதற்கு பலவிதமான இன்னல்களுக்கிடையே பாடுபட்டு வந்தார்.

மூன்று வேளையும் நல்ல முறையில் சாப்பிட்டுக்கொண்டிருந்த மதுரை கோதண்டராம ஆலைத் தொழிலாளர்களை வேலை நிறுத்தம் செய்யுங்கள் என்று கூறி தம் சமயம் அவர்களுக்காக கஞ்சி தொட்டி வைக்க வேண்டும்—அதற்கு அரசாங்கம் உதவி செய்ய வேண்டும் என்று பொதுவுடைமையர்கள் கேட்கிறார்களாம். இது போன்ற தொழிலாளர்களைப் பழிவாங்குவதன் மூலம், தங்கள் கட்சி இருக்கிறது என்பதை வெளிப்படுத்திக் கொள்கிறார்கள்."

தோழர் என். எஸ். இளங்கோ மேலும் பேசுகையில் குறிப்பிட்டதாவது:—

"கடந்த 30 ஆண்டுகளுக்கு முன்பே, பொதுவுடைமைக் கட்சிக்காரர்கள் நாட்டில் தோன்றுவதற்கு முன்பே பொதுவுடைமைக் கொள்கைகளை தென்னாட்டில் பரப்பியவர் சிங்காரவேலர்; இவர் சீர்திருத்தக் கருத்துக்களைக் கொண்டிருந்தார் என்ற காரணத்திற்காக பொதுஉடைமைக் கொள்கையிலிருந்து ஒதுக்கிவிட்டார்கள்."

புதிய கல்வித் திட்டத்தை கண்டித்து அவர் பேசியதாவது:—

"அரசாங்கத்தால் கொண்டுவரப்பட்ட புதிய கல்வித் திட்டத்தை காங்கிரசில் உள்ள பெரிய தலைவர்களான திரு ஜெ. சி குமரப்பா, ஓமந்தூர் ராமசாமி ரெட்டியார், காமராஜ் போன்றவர்கள் எதிர்த்துள்ளார்கள்; இக்கல்வித் திட்டத்தால் '80' லட்சம் மாணவர்கள் பாதிக்கப்படுவார்கள் என்று எடுத்துக் காட்டுகிறார்கள்; எல்லாக் கட்சியினர்கள் எதிர்த்தும், சட்டசபையில் புதிய கல்வித் திட்டத்திற்கு எதிராகத் தீர்மானம் நிறைவேறியும்கூட ஆச்சாரியார் அரசாங்கம் அலட்சியமாக இருந்துவிட்டது; மக்கள் குரலை மதியாமல் வாழ்கிறது; எதிர்த்துக் கிளர்ச்சி செய்த 2000 தி. மு கழக தோழர்களையும் சிறையிலடைத்தது; இதுபோன்ற அரசாங்கத்தை மேலும் அனுமதிக்க கூடாது."

நகர தி. மு. கழக செயலாளர் என். முத்து, கலைச் செல்வன், அ. கந்தசாமி, ஆகியோர் சிறிது நேரம் பேசினர்.

தோழர்கள் எம். என். ராய், வி. வி. தனுஷ்கோடி ஆகியோர் மறைவுக்கு அனுதாபத் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

"கந்தி கலா மன்றம்"

குமாரசாமி ராஜாவின் இல்லம் தானம்

இராஜபாளையம், மார்ச் 21—

ரூ. 50,000 பெறுமானமுள்ள தமது பங்களாவையும், அதன் பக்கத்திலுள்ள மனையையும் காந்தி கலா மன்றத்திற்கு ஒரிசா கவர்னர் பி. எஸ். குமாரசாமி ராஜா வழங்ினார்.

இந்த மாளிகை தமிழ் மொழியையும், பண்பாட்டையும் பரப்பும் நிலையமாக விளங்கும் என்று தெரிகிறது.

சென்னை கவர்னர் பிரகாசா அவர்கள் கல்கோட்டை வழங்கப்பட்டதின் சம்பந்தமான உரிமைப் பத்திரம் பொறிக்கப்பட்ட பட்டயத்தைத் திறந்து வைத்தார்.

இவ்விழாவிற்கு டி. டி கிருஷ்ணமாச்சாரி தலைமை வகித்தார்.

திரு. குமாரசாமி ராஜா அவர்கள் பேசுகையில், 'தன்னுடைய நெடுநாளைய ஆசை இந்த விழாவின் மூலம் நிறைவேறுவதாகக் குறிப்பிட்டார்

திரு டி. டி. கிருஷ்ணமாச்சாரி கூறுகையில், திரு. ராஜா அவர்களின் குணம், பண்புகளை எடுத்துக் கூறிவிட்டு, 'இம்மாளிகை கொடுத்ததின் மூலம் அவர் தமது உடைமை அனைத்தையும் தமது நகர மக்களுக்கு அர்ப்பணித்துவிட்டதாக' குறிப்பிட்டார்.

தோவிருக்கச் சுவை விழுங்கிகள்!

கடலூர், ஓ. டி. மார்ச் 19—

இவ்வூர் தி மு கழகத் திறப்பு விழாவின்போது நகர முக்கிய இடங்களில் பறக்கவிடப்பட்ட கழக கொடிகளில் ஜட்கா நிற்குமிடத்தின் பக்கத்தில் கொடியை மட்டும் சில திருடர்கள் காணவில்லை (கம்பம் மட்டும் இருக்கிறது); இதைத நகர செயலாளர் இ. கோவிந்தராசன் போலீஸ் சப்-இன்ஸ்பெக்டருக்கு ரிப்போர்ட் செய்திருக்கிறார் போலீசாரும் புலன் விசாரித்துக் கொண்டு வருகிறார்கள்.

தந்திக் கம்பிகளை அறுத்தனர்!

ஆந்திராவில் அட்டகாசம்

கர்நூல், மார்ச் 21—

மது விலக்கை ரத்து செய்து மதுபடியும் கள்ளுக்கடைகளைத் திறக்கவேண்டும் என்று சர்க்காருக்கு ராமமூர்த்தி குழு சிபார்சு செய்ததை எதிர்த்து மதுவிலக்கு நீடிக்க வேண்டும் என 5-ந் தேதி முதல் உண்ணாவிரதமிருந்துவரும் சுவாமி சீதாராமின் நிலைமை மிகவும் மோசமாக இருக்கிறது என்று கூறப்படுகிறது.

சுவாமி இறந்துவிட்டார் என்ற வதந்தியை யாரோ கிளப்பிவிட்டதைக் கேட்டு ஆதரவாளர்கள் சிலருக்கு ஆத்திரம் வந்து அவர்கள் நேராக ரயில் தண்டவாளத்தை நோக்கிச் சென்றனர்.

நந்தியால் நரசராவ்பேட்டை ரயில் ஸ்டேஷன்களுக்கிடையே தந்திக் கம்பங்களை அறுத்தெறிந்தனர். இதனால் இந்த மார்க்கத்தில் ரயில் போக்குவரத்து தடைப்பட்டிருப்பதாகதெரிகிறது

கழகக் கூட்டங்கள்

★

களம்பூர்

24—3—54 மாலை 5 மணிக்கு
இடம்:
தருமராசா கோவில் மைதானம்
தலைவர்:
ஏ. எல். சி. கிருட்டிணசாமி
பேசுபவர்.
ஏ. கோவிந்தசாமி, எம். எல். ஏ.

★

நாவல்பூண்டி

25-3-54 மாலை 6-30 மணிக்கு
தலைவர்: வீரையன்
பேசுவோர்:
சி. பி. சிற்றரசு
எஸ். எம். வைத்திலிங்கம்

சென்னிமலை தி. மு. கழக முதலாண்டு விழா

28—3—54 ஞாயிறு மாலை நடைபெறும்

★

பேசுவோர்:
ஈ. வெ. கி. சம்பத்
நாஞ்சில் கி. மனோகரன்
அருண்மொழி

இரவு கழகத் தோழர்கள் நடிக்கும் இயக்க நாடகம் நடைபெறும்.

'கண்ணீர்த்துளி'-நாடகம்

25-3-54 வியாழக்கிழமை மாலை 6-30 மணிக்கும், இரவு 10-30 மணிக்கும் இரண்டு நாடகங்கள், அம்மாப்பேட்டை ஜோதி டாக்கீசில், அம்மாப்பேட்டை தி. மு கழக நிதிக்காக, தி. மு. கழக தியாகராய மன்றத்தார் நடிக்கும் "கண்ணீர்த் துளி" என்னும் நாடகம் நடைபெறும்.

குறிப்பு: இத்துடன் டால்மியாபுர போராட்ட ஓரங்க நாடகம் நடைபெறும்.

முஸ்லிம் லீகின் எதிர்காலம்

தலைவர்களிடையே பிளவு?

கராச்சி, மார்ச் 22—

லீகிலிருந்து வெளியேறி விடுவதா, அதைச் சீர்திருத்துவதா என்பது பற்றி பிரபல லீக் தலைவர்கள் தொடர்ந்து ஆலோசனை நடத்தி வருகிறார்கள்.

இந்தப் பேச்சுகளின் விளைவாகப் புதிய அரசியல் கட்சிகள் ஏற்படலாம் அல்லது புதிய அரசியல் கட்சியே உருவாகலாம் என்று தெரிகிறது.

கிழக்கு வங்கத்தில் முஸ்லீம் லீக் தோற்றது மத்திய சர்க்காரையோ அல்லது அரசியல் நிர்ணய சபையையோ பாதிக்காது என்று பாக் பிரதமர் வெளியிட்ட அறிக்கையின் விளைவாக முஸ்லீம் லீகுக்குள் பிளவு ஏற்பட்டுள்ளது. சில லீக் தலைவர்கள் பாக்-பிரதமரின் கருத்தை ஒப்புக் கொள்ளவில்லை என்று தெரிகிறது.

கிழக்கு வங்க முன்னாள் பிரதம மந்திரி அ. நி. சபையிலிருந்து ராஜினாமா செய்துவிட விரும்புகிறாராம்.

ஏப்ரல் 2-ந் தேதி முதல் வருகிறது

அரசியல்—சமுதாய—பொருளாதார-கலைத்துறை ஏடு

முரசொலி

[வெள்ளிதோறும்]

ஆசிரியர்: மு. கருணாநிதி

வார இதழ் விலை அணா 2

விபரங்களுக்கு: நிர்வாகி, 'முரசொலி,' சென்னை—24

'நம் நாடு' ஏஜண்டுத் தோழர்கட்கு

'நம் நாடு' பில் பாக்கி அனுப்பாமல் பாக்கி வைத்துக் கொண்டிருக்கும் வெளியூர் ஏஜண்டுத் தோழர்கட்கு, 'நம் நாடு' அனுப்புவதை நிறுத்தி, டிபாசிட் தொகை போக மீதி பாக்கியை வசூலிக்கப்படும், ஏஜன்சியையும் ரத்து செய்து, வேறு ஏஜன்சி நியமிக்கப்படும் என்பதையும் இதன்மூலம் அறிவித்துக் கொள்ளுகின்றோம்.

'நம் நாடு' ஏஜன்சி ரத்து செய்யப்பட்டு, டிபாசிட் போக அதிக பாக்கியுள்ள ஒருசில தோழர்கள் பாக்கி ரூபாயும் அனுப்பவில்லை. எழுதும் கடிதங்கட்கும் பதில் எழுதுவதில்லை. ஏப்ரல் மாதம் முதல் வாரத்திற்குள் பாக்கி வந்து சேராவிட்டால், 'நம் நாடு'வில், பாக்கியுள்ளவர்கள் ஊர், பெயரை வெளியிடுகின்றோம். கிளைக் கழகத் தோழர்கள் பாக்கியை அனுப்பி வைக்கும்படி அடிக்கடி நினைவுபடுத்தி, இங்கு ரூபாய் அனுப்பி வைக்கும்படி செய்ய வேண்டுகின்றோம்.

இராயபுரம், சென்னை
20—3—54

பொறுப்பாளர்,
'நம் நாடு'

சென்னை மாவட்ட தி.மு.கழக செயற் குழு கூட்டம்

நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள்

சென்னை, மார்ச் 22—

20—3—'54 சனி மாலை 6-க்கு 'அறிவகத்'தில் சென்னை மாவட்ட தி. மு கழக நிர்வாக உறுப்பினர் கூட்டம் தோழர் ஈ. எம். கண்ணபிரான் தலைமையில் நடைபெற்றது கீழ்க்கண்ட முடிவுகள் செய்யப்பட்டன:—

அறிஞர் எம். என். ராய், நீதிக் கட்சித் தலைவரும் திராவிட இயக்க அனுதாபிகளுமான தூத்துக்குடி வி. வி. தனுஷ்கோடி, என். ஆர். சாமியப்பா, அறுபக்கோட்டை முத்து ஆகியவர்களின் மறைவுக்கு இக்கமிட்டி வருந்துவதுடன், தனது ஆழ்ந்த அனுதாபத்தை அன்னாரின் குடும்பத்தாருக்கு தெரிவித்துக் கொள்ளுகிறது.

பின்னர், 14—3—54ல், திருச்சியில் நடந்த தி. மு கழக பொதுக் குழுவின் நிகழ்ச்சிகளையும், முடிவுகளையும், தோழர் என். வி நடராசன் அவர்களால் விளக்கப்பட்டது.

சென்னை மாவட்ட 2-வது மாநாட்டின் வரவு - செலவு கணக்குகளைப் பரிசிலனை செய்ய தோழர் வி. ராமசாமியவர்களை கன்வீனராகவும், தோழர்கள் வெற்றிவீரன், கிள்ளிவளவன், கரிகாலன், ஏ. ஐயராஜ் ஆகியோரைக் கொண்ட குழு ஒன்றும் அமைக்கப்பட்டது.

முடிவுகள்:—

1. தூத்துக்குடி நிதியளிப்பில் சென்னை மாவட்டத்தில் உள்ள கிளைக் கழகங்களும், மாவட்ட உறுப்பினர்களும் பெருமுயற்சி எடுத்து மற்ற மாவட்டங்களைவிட, பெருந் தொகையை அளித்தமைக்கு பொதுச் செயலாளர் அண்ணா அவர்களால் அண்மையில் நடைபெற்ற பொதுக் குழுவில் பாராட்டினமை கண்டு, இக்கமிட்டி மகிழ்ச்சி அடைவதுடன் கடமை யுணர்ச்சியுடன் பணியாற்றிய கிளைக் கழகங்களுக்கும் அனுதாபிகளுக்கும் இக்கமிட்டி தனது நன்றியை தெரிவித்துக் கொள்ளுகிறது.

2 கல்லக்குடி வழக்கில் சர்க்கார் அடக்குமுறைக்கு ஆளாகி சிறைத் தண்டனை அனுபவித்து வரும் நம் கழக வீரர்களுக்கு களி உணவு போன்றவைகளை அளித்து அரசியலார் கொடுமைப் படுத்துவதை இக்கமிட்டி வன்மையாகக் கண்டிப்பதுடன், அவர்களது வழக்கையும் வாபஸ் பெறுமாறு வற்புறுத்துகிறது.

3 தூத்துக்குடி வழக்கில் சம்பந்தப்பட்டுள்ள கழக வீரர்களை, 8 மாத காலமாக ஜாமீனில் விடாது சர்க்கார் செய்து வரும் கொடுமையை இக்கமிட்டி கண்டிப்பதுடன். அவர்களது வழக்கையும் நிபந்தனையின்றி வாபஸ் பெறுமாறு வற்புறுத்துகிறது

4. மும்முனைப் போராட்டத்தில் உயிரிழந்த லட்சிய வீரர்களின் குடும்பத்தாருக்கும், உடலுறுப்புப் பழுதடைந்த' தோழர்களின் குடும்பத்தாருக்கும் உதவி செய்வதென்று பொதுக்குழு தீர்மானித்திருப்பதை இக்கமிட்டி வரவேற்பதுடன், இம்முயற்சிக்கு சென்னை மாவட்டத்தைச் சேர்ந்த எல்லா கிளைக் கழகங்களும் நிதியளிப்புக்கு பேருதவி புரியுமாறு கேட்டுக் கொள்ளுகிறது.

இறுதியில் செயலாளர் நன்றி கூற கூட்டம் இனிது முடிந்தது.

ரூ. 99 கோடி முதலீடு!

புதுடில்லி, மார்ச் 20—

1953—54ல், இந்தியாவில், ரூ. 98,09,00,000 முதலீடு செய்யத் தனிப்பட்டவர்களுக்கு அனுமதி அளிக்கப்பட்டதாக அறிவிக்கப்படுகிறது. இதில் ரூ 81,040,0000 உள்நாட்டு விடுமுதல்; ரூ. 17,05,00,000 அந்நிய விடுமுதல.

1954 ஜனவரி வரை தொழில் நிதி கார்ப்பரேஷன் தொழிலதிபர்களுக்கு ரு 17,65,00,000 கடன் கொடுக்கப்பட்டிருக்கிறது.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா.நெடுஞ்செழியன், எம். ஏ., அவர்களால், அழகிரி அச்சகத்தில் அச்சிடப் பெற்று (24, குளிய நாராயண செட்டித் தெரு, இராயபுரம்) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: இ. என். அண்ணாதுரை; எம். ஏ.